بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 18/02/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**'முஸ்லிஹ் மவ்வூது முன்னறிவிப்பு' நிறைவேறியது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பல்வேறு கோணங்களில் எடுத்துரைத்த மேற்கோள்களின் ஒளியில் ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝

இஸ்லாம் எந்தவோர் அடையாளத்தையும் காட்டுவதில்லை என இஸ்லாத்தின் எதிரிகள் கூறும் ஆட்சேபனைக்கு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கு ஒரு பெரும் அடையாளத்தை கூறினார்கள். அது என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் ஏறக்குறைய 52, 53 சிறப்புகளைக் கொண்ட தனது ஒரு மகனுடைய பிறப்பைக் குறித்து முன்னறிவிப்பு செய்தார்கள். அந்த மகன் அக்குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் பிறந்தது மட்டுமின்றி அவர் நீண்ட வாழ்நாளையும் பெற்றார். அத்துடன் இஸ்லாத்திற்கு அசாதாரணமாக தொண்டாற்றும் நல்வாய்ப்பையும் பெற்றார். இந்த முன்னறிவிப்பை நாம் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 20 ஆம் தேதி, முஸ்லிஹ் மவ்வூது (ரலி) முன்னறிவிப்பு என்று நினைவு கூர்கிறோம். ஜமாஅத் கூட்டங்களில் இதன் பல்வேறு அம்சங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. அதேபோன்று M.T.A விலும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

முன்னறிவிப்புக்கு ஏற்ப நீண்ட வாழ்நாளை பெறக்கூடிய அந்த குழந்தையினுடைய உடல் நிலையைக் குறித்து **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** குழந்தைப் பருவத்தில் எனது உடல் நிலை மிகவும் பலவீனமானதாக இருந்தது. முதலில் கக்குவான் (தொடர்) இருமல் ஏற்பட்டது. பிறகு எனது உடல் நிலை எந்த அளவு மோசமாகிவிட்டது என்றால், 11, 12 வயது வரை மரணத்திற்கும் வாழ்வுக்கும் இடையிலான போராட்டத்தில் மூழ்கியிருந்தேன். கண் பார்வை குறைந்து விட்டது. 6, 7 மாதங்கள் வரை தொடர்ச்சியாக எனக்கு காய்ச்சல் வந்தது. காசநோயாளி என்று நான் முடிவு செய்யப்பட்டேன். இந்த காரணங்களால் முறையாக என்னால் படிக்க முடியவில்லை. பள்ளிக்கூடத்திற்கு பெரும்பாலும் போக இயலவில்லை. இவ்வாறான நிலையில் நான் நீண்ட காலம் வாழ்வேன் என்று யார் உறுதியளிக்க முடியும்! இவ்வாறான நிலையில், இந்த ஞானங்கள் எனக்கு கிடைக்கும் என யாரால் கூற முடியும்! **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** குர்ஆன் மற்றும் ஹதீஸ் படித்தாலே போதுமானது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னைக் குறித்து கூறினார்கள். சுருக்கமாக, எனது உடல் நிலை எந்த அளவு பலவீனமாக இருந்தது என்றால், உலகக் கல்வியை

கற்பதற்கு நான் முற்றிலும் இயலாதவனாக இருந்தேன். என் கண் பார்வையும் பலவீனமானதாக இருந்தது. **Primary, middle** மற்றும் **entrance** ஆகிய தேர்வுகளில் தோல்வியடைந்திருந்தேன். எந்தவொரு தேர்விலும் வெற்றி பெறவில்லை.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** வெளிப்புற மற்றும் உட்புற ஞானங்களால் நான் நிரப்பப்படுவேன் என்று இறைவன் என்னைக் குறித்து செய்தி அறிவித்திருந்தான். உலக ஞானங்களைப் பொறுத்தவரை எந்த ஒரு கல்வியையும் நான் கற்காத போதிலும், எனது எழுதுகோல் மூலமாக அல்லாஹ் எவ்வாறான மாபெரும் அறிவார்ந்த நூல்களை எழுத வைத்துள்ளான் என்றால், இஸ்லாமிய விவகாரங்கள் குறித்து இதைவிட மேலாக ஒன்றும் எழுத முடியாது என உலகம் ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. தப்ஸீரே கபீர் எனும் பெயரில் திருக்குர்ஆனுடைய விளக்க உரையின் ஒரு பகுதியை நான் எழுதியுள்ளேன். அதைப் படித்த பிறகு பெரும்பெரும் எதிர்ப்பாளர்கள் கூட இதைப்போன்ற ஒரு விளக்கவுரை இன்றுவரை எழுதப்படவில்லை என ஒப்புக் கொண்டுள்ளனர்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ''நான் சிறுவனாக இருந்தபோது கனவில் ஒரு வானவரை கண்டேன். அவர் சூரா ஃபாத்திஹாவின் விளக்க உரையை எனக்கு கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ என்ற வசனத்தை அடைந்தபோது, இன்று வரை எவ்வளவோ விரிவுரையாளர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் இந்த வசனம் வரை மட்டுமே விளக்க உரை எழுதியுள்ளார்கள். ஆனால் நான் உமக்கு இதற்கு அடுத்தும் உள்ள விளக்கவுரையை கற்றுக் கொடுப்பேன் என்று அவர் கூறினார். ஆகவே, அவர் முழு சூரா ஃபாத்திஹாவின் விளக்கவுரையை எனக்கு கற்றுக்கொடுத்தார். திருக்குர்ஆனை புரியும் தன்மை எனக்குள் வைக்கப்பட்டுள்ளது என்பதுதான் இந்த கனவின் உண்மையான பொருளாக இருந்தது.''

திருக்குர்ஆனை புரியும் தன்மை அன்னாரிடம் எந்த அளவு இருந்தது என்றால், சூரா ஃபாத்திஹாவிலிருந்தே அனைத்து இஸ்லாமிய ஞானங்களையும் தம்மால் எடுத்துக்கூற முடியும் என உலகிற்கு முன்னால் வாதிட்டு சவால் விடுத்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** நம்முடைய ஸ்கூல் ஃபுட்பால் டீம், அமிர்தசரஸில் மேட்ச் ஜெயித்ததன் காரணமாக ஒரு செல்வந்தர் தேனீர் அருந்த அழைப்பு கொடுத்திருந்தார். அங்கு சொற்பொழிவாற்றும்படி நான் நிறுத்தப்பட்டேன். என்னுடைய துஆவுக்கிணங்க இறைவன் சூரா ஃபாத்திஹா தொடர்பான ஒரு நுட்பமான கருத்தை எனது உள்ளத்தில் இட்டான். அந்த சொற்பொழிவில், பாருங்கள்! அல்லாஹ் திருக்குர்ஆனில் غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ என்ற துஆவை கற்றுக் கொடுத்துள்ளான். غَيۡرِ الۡمَغۡضُوۡبِ என்பதன் பொருள், நாங்கள் யூதர்களாக மாறிவிடக்கூடாது என்பதாகும். وَلَا الضَّآلِّيۡنَ என்பதன் பொருள், நாங்கள் கிறிஸ்தவர்களாக ஆகிவிடக் கூடாது என்பதாகும். இந்த சமுதாயத்தில் ஒரு மஸீஹ் தோன்றுவார் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதும் இவ்விஷயத்தை இன்னும் தெளிவுபடுத்துகிறது. எவர்கள் அந்த மஸீஹை மறுப்பார்களோ அவர்கள் யூத பண்பை பெற்று விடுவார்கள். சிலர் தம்முடைய மார்க்க போதனையை புரியாமல் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் வினோதமான விஷயம் என்னவென்றால், சூரா ஃபாத்திஹா மக்காவில் இறங்கியது. அப்போது எல்லாரையும் விட அதிக எதிர்ப்பு மக்காவின் சிலை வணங்கிகள் சார்பாக செய்யப்பட்டது.

இறைவா! நாங்கள் சிலை வணங்கிகளாக ஆகிவிடக்கூடாது என துஆ கற்றுக் கொடுக்கப்படவில்லை. மாறாக, இறைவா! நாங்கள் யூதர்களாகவோ கிறிஸ்தவர்களாகவோ ஆகிவிடக்கூடாது என்று துஆ கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, மக்காவின் சிலை வணங்கிகள் முற்றிலும் அழிக்கப்பட்டுவிடுவர்; யூதமும் கிறிஸ்தவமும் எஞ்சி இருக்கும். ஆகவே அவற்றினுடைய குழப்பத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக எப்பொழுதும் இந்த துஆவை செய்ய வேண்டியது அவசியமாகும் என்று அல்லாஹ் இதில் முன்னறிவிப்பு செய்துள்ளான் என நான் கூறினேன்.

என்னுடைய அந்த சொற்பொழிவு முடிந்தவுடன் பெரும் பெரும் தலைவர்கள் என்னை சந்தித்து, தாங்கள் நன்கு திருக்குர்ஆன் ஓதியிருக்கிறீர்கள்! நாங்கள் எங்களது முழு வாழ்விலும் இந்த நுட்பமான கருத்தை முதன் முதலாக இப்பொழுதுதான் கேள்விப்படுகிறோம் என்று கூறினர். உண்மை என்னவென்றால், எல்லா விளக்க உரைகளையும் பாருங்கள்! எந்தவொரு திருக்குர்ஆன் விரிவுரையாளரும் இன்று வரை இந்த நுட்பமான கருத்தை எடுத்துரைத்தது கிடையாது. அல்லாஹ் என் மூலமாக இந்த நுட்பமான கருத்தை வெளிக்கொணர்ந்த போது, என் வயது இருபதை நெருங்கிக் கொண்டிருந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** "எனக்கு 11 வயதாக இருந்தபோது, இறைவன் மீது ஏன் நம்பிக்கை கொள்கிறேன்? அவனுடைய இருப்புக்கு சான்றுகள் என்ன? என்று எனது உள்ளத்தில் சிந்தனை தோன்றியது. இரவு நீண்ட நேரம் வரை இந்த விஷயம் குறித்து நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இறுதியில் 10, 11 மணியளவில், ஆம்! இறைவன் இருக்கிறான் என்று எனது உள்ளம் தீர்ப்பு வழங்கியது. என்னைப் படைத்த இறைவன் எனக்கு கிடைத்து விட்டான் என்று உணர்ந்த அந்த தருணம் எனக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய தருணமாக இருந்தது. கேட்டறிந்த ஈமான் கண்டுணர்ந்த ஈமானாக மாறிப்போனது. என் இறைவா! உன்னுடைய இருப்பு குறித்து எனக்கு ஒருபோதும் சந்தேகம் வரக்கூடாது என நீண்டகாலம் வரை நான் இந்த துஆவை அல்லாஹ்விடம் கேட்டு வந்தேன். தற்போது எனக்கு 35 வயதாகிறது. இப்போது நான், இறைவா! உன்னுடைய இருப்பு குறித்து எனக்கு அனுபவ அறிவு உருவாகி விட வேண்டும் என்று நான் என் மீது அதிக அளவு அழுத்தம் கொடுக்கிறேன். இறை இருப்பு பற்றிய சான்று என்னிடத்தில் உறுதியான போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவமும் என்மீது தெளிவாகிவிட்டது."

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களை அல்லாஹ் ஞானங்களால் நிரப்பியதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

இந்த சிறுவன் முஸ்லிஹ் மவ்வூதாக ஆகுவார் என்றே ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கருதி வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தஷ்ஹீஸுல் அஸ்ஹான் எனும் இதழை தொடங்கியபோது, அதை அறிமுகம் செய்து வைப்பதற்காக அதனுடைய நோக்கங்கள் குறித்தும் குறிக்கோள்கள் குறித்தும் ஒரு கட்டுரையை எழுதினார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அந்த கட்டுரையை குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் சிறப்பாக புகழ்ந்து பேசினார்கள். ஆனால், அதன்பிறகு தனிப்பட்ட முறையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களை சந்தித்தபோது, அன்பரே! உங்களுடைய கட்டுரை மிக நன்றாக இருந்தது. ஆயினும் என் உள்ளம் மகிழ்ச்சி

அடையவில்லை. ஏனென்றால் உங்களுக்கு முன்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல் பராஹீனே அஹ்மதிய்யா இருந்திருந்தது. நீங்கள் அதிலிருந்து பயன்பெற்றவாறு அதைவிட மேலான ஒன்றை கொண்டு வருவீர்கள் என உங்களிடம் எதிர்பார்க்கப்பட்டது என்று கூறினார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறியதன் பொருள், வருங்கால சந்ததியினரின் வேலை, முந்தைய அடித்தளத்தை உயர்த்திக்கொண்டே செல்ல வேண்டும் என்பதாகும். **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இது எவ்வாறான விஷயம் என்றால், வருங்கால சந்ததியினர் இதை நினைவில் வைத்துக் கொண்டால் அருள்களையும் பரக்கத்துகளையும் அவர்களும் பெற்றுக்கொள்ளலாம்; அருள்களும் பரக்கத்துகளும் சமுதாயத்திற்கு கிடைப்பதற்கும் அவர்கள் காரணமாக ஆகலாம். தம் மூதாதையர்களை முந்தக்கூடிய முயற்சி நல்ல விஷயங்களில் இருக்க வேண்டும். அதுவல்லாமல், ஒரு திருடனின் மகன் தன் தந்தையை விட பெரிய திருடனாக ஆக முயற்சிக்கக்கூடாது. இதன் பொருள் என்னவென்றால், ஒரு தொழுகையாளியின் சந்ததி தம் தந்தையை விட பெரிய தொழுகையாளியாக முயற்சிக்க வேண்டும்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் உடல் நிலையையும் கல்வி தரத்தையும் அறிந்திருந்தார்கள். அவ்வாறிருந்தும் கூட, இந்த சிறுவனிடத்தில் எத்தகைய தகுதி உள்ளது என்றால் இவரால் மிக மேலான கட்டுரையை எழுத முடியும் என ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் திறமை மீது உயரிய நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** என்னுடைய கண் பார்வை போய்விடும் என்று மருத்துவர்கள் கூறியபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என் உடல்நலத்திற்காக குறிப்பாக துஆக்களை செய்ய ஆரம்பித்தார்கள். அத்துடன் நோன்பு நோற்கவும் ஆரம்பித்தார்கள். கடைசி நோன்பில், இஃப்தாரி செய்வதற்காக தம் வாயில் உணவை இட்ட போது திடீரென நான் கண்களை திறந்து எனக்கு பார்வை வந்து விட்டது என கூறினேன்.

மவ்லவி சாஹிபிடமிருந்து (அதாவது முதலாவது கலீஃபாவிடமிருந்து) திருக்குர்ஆன் மொழியாக்கம் மற்றும் புகாரி ஹதீஸ் ஆகியவற்றை மட்டுமாவது கற்றுக் கொள் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பலமுறை என்னிடம் கூறியிருக்கிறார்கள். இதுமட்டுமின்றி, கொஞ்சம் மருத்துவத்தையும் கற்றுக்கொள்; ஏனென்றால் இது நம் பாரம்பரிய கலை என்றும் கூறியிருக்கிறார்கள். சுருக்கமாக, நான் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்து மருத்துவத்தையும் கற்றுக் கொண்டேன். திருக்குர்ஆன் விளக்கவுரையையும், புகாரியையும் கற்றுக் கொண்டேன். சில அரபி இதழ்களையும் அன்னாரிடமிருந்து கற்றுக் கொள்ளும் வாய்ப்பு பெற்றேன். ஆக இதுதான் எனது கல்வி அறிவாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களை அல்லாஹ் ஞானங்களைக் கொண்டு எவ்வாறு நிரப்பினான் என்றால், அன்னாருடைய 52 ஆண்டு கால (கிலாஃபத்) காலகட்டம் இதற்கு சாட்சியாக உள்ளது. அது மார்க்க விஷயமாக இருந்தாலும் சரி! அல்லது பௌதீக விஷயமாக இருந்தாலும் சரி! ஏதேனும் ஒரு தலைப்பில் எழுதுங்கள் என்றோ அல்லது பேசுங்கள் என்றோ அன்னாரிடம் கூறப்படும்போதெல்லாம் அறிவு, ஞானத்தின் நதியை பெருக்கெடுத்து ஓடச்செய்வார்கள். எண்ணற்ற சந்தர்ப்பங்களில் அன்னாருடைய சொற்பொழிவுகளை

அன்னியர்களும் அளவின்றி பாராட்டி உள்ளார்கள்; செய்தித்தாள்களும் செய்திகளை வெளியிட்டுள்ளன.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அந்த முன்னறிவிப்பு என் மூலமாக நிறைவேறிவிட்டது என அல்லாஹ் தன் இறையறிவிப்பாலும், அறிக்கையாலும் என்னிடம் கூறிவிட்டான். இஸ்லாம் இறைவனுடைய உண்மையான மார்க்கம் என்பதையும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனுடைய உண்மையான தூதர் என்பதையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனால் உண்மையாக அனுப்பப்பட்டவர் என்பதையும் இஸ்லாத்தின் எதிரிகள் மீது இப்போது அல்லாஹ் தன் சான்றினால் முழுமையாக்கி விட்டான்.

ஆகவே இந்த முன்னறிவிப்பு நிறைவேறிவிட்டதுதான்! ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மிஷன் முழுமையடையாதவரை, இஸ்லாத்தின் கொடி முழு உலகிலும் பரக்காதவரை இந்த முன்னறிவிப்பின் சொற்கள் நிலை பெற்றிருக்கும். இன்ஷா அல்லாஹ்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தையும் அந்தஸ்தையும் உலகில் நிலை பெறச் செய்ய வேண்டும்; இஸ்லாத்தின் உண்மையை உலகில் வெளிப்படுத்தி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் அனைவரையும் ஒன்று கூட்ட வேண்டும் என்ற குறிக்கோளை எப்போதும் முன்னிறுத்தியவாறு நாம் நமது கூட்டங்களை நடத்துவோம் என்றால் அவை பயனளிப்பவையாக இருக்கும். இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டவர்களைத்தவிர வேறு எவர் மூலமாகவும் இஸ்லாத்தின் கொடி மீண்டும் உலகில் பறக்க இயலாது. இந்த பணியை செய்யக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)